# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL.

## C.C. No. 04/2025

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. Manikandan** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **30.07.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**முதல் விசாரணை**

நான் தற்போது அழகியபாண்டியபுரம் வனச்சரகத்தில் தனிபிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 29.12.2022 ம் தேதி மாவட்ட வனஅலுவலர் மற்றும் வனஉயிரின காப்பாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நானும் என்னுடன் உதவி வனபாதுகாவலர் வனகாப்பாளர் சங்கரபாண்டி வேட்டை தடுப்பு காவலர் சரவணன் சிராஜ் ஜெகன் ஆகியோருடன் இணைந்து சுமார் 4.30

மணியளவில் பணகுடி பிரிவு சிவகாமிபுரம் பீட்டிற்கு உட்பட்ட உப்பு ஓடை தென்பகுதியிலுள்ள குட்டிகுளம் என்ற இடத்தில் 3 நபர்கள் நின்று இருந்தனர். எங்களை பார்த்ததும் அதில் ஒருவர் தப்பி ஓடிவிட்டார். மற்ற இருவரையும் பிடித்து விசாரணை செய்தபோது ஒருவர் பெயர் ஆதிகேசவன் என்றும், மற்றொருவர் பெயர் சுனில் என்பதும் தப்பியோடிய எதிரி இசைக்குமார் என்பதும் தெரியவந்தது. இவர்கள் ஒரு ஊடும்பை வேட்டையாடி கத்தியால் அதன் தோலை கிழித்து அதன் இறைச்சியை துண்டுகளாக்கி வைத்து இருந்தது தெரியவந்தது. அவர்களிடம் சம்பவ இடத்திலேயே சங்கரபாண்டி வனக்காப்பாளர் ஸ்தலமகஜர் தயார் செய்தும் இருவரிடமும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த ஸ்தலமகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். அவர்களை மேல் விசாரணைக்காக வனக்சரக அலுவலகம் கொண்டு வந்து அதில் ஒருவர் ஆதிகேசவன் என்பவர் 16 வயதுடைய இளவர் என்பதால் இளம்சிறார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். சுனில் என்பவரை வனநீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற ஆணையின்படி சிறையில் அடைக்கப்பட்டார். அந்த சம்பவஇடத்திலிருந்து உடும்பு இறைச்சி, தலை மற்றும் தோல், அலுமனிய சட்டி, சில்வர் கரண்டி மற்றும் வெட்ட பயன்படுத்தபட்ட கத்தி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. H.Namuna சங்கரபாண்டி வனகாப்பாளரால் தயார் செய்யப்பட்டது.